www.nammakalvi.com



*உரைநடை உலகம்*

# இயல் எட்டு
# பெரியாரின் சிந்தனைகள்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

கூற்று : பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

காரணம் : சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு　　ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி
இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு　　ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடை: ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி**

### குறுவினா

**1. "பகுத்தறிவு" என்றால் என்ன?**

எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.

### சிறுவினா

**1. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துக்களை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

- பெரியார் அவர்கள், பொருளாதார தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார்.
- ஆனால் இன்றைய நடைமுறையில் பொருளாதாரத்தில் நிறைவு பெறவில்லை என்றாலும் சிறுகடன் பெற்றாவது அநேகர் ஆடம்பரமாகவே வாழ விரும்புகின்றனர்.
- விழாக்களும் சடங்குகளும் மூடப்பழக்கம் வளர்ப்பதோடு வீண் செலவும் ஏற்படுத்துகிறது. சடங்குகள், விழாக்களைத் தவிர்த்து சிக்கனமாய் வாழச் சொன்னார்.
- ஆனால் இன்று இதுவும் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லாமல் போய்விட்டது.
- எனவே பெரியார் கூறிய சிக்கனக் கொள்கைகளை, இன்றைய நடைமுறை நிகழ்வுகளில் பின்பற்ற முடியாத நிலையே அநேக நேரங்களில் உள்ளது.

www.nammakalvi.com



## நெடுவினா

**1. மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.**

**முன்னுரை:**

தமிழக மக்களைப் பகுத்தறிவு பாதைக்கு அழைத்துச் சென்றவர் பெரியார். இந்தியாவின் பழமையான மொழி தமிழ். பழமையான இலக்கியமும் தமிழிலே உள்ளன. இலக்கியத்திலும், மொழியிலும் பெரியார் செய்த சீரமைப்புகள் பற்றி அறிந்து கொள்வோம்.

**மொழி, இலக்கியம் பற்றிய பெரியாரின் கருத்து:**

மொழியோ, நூலோ, இலக்கியமோ எதுவானாலும், மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்ற கருத்துடையவராய் இருந்தார் தந்தை பெரியார்.

**இலக்கிய சீர்திருத்தம்:**

அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் படைக்கப்பட வேண்டும். மதம் கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற, யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியமே அதிகளவில் வேண்டும். திருக்குறளில் அறிவியல் கருத்துக்களும், தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால், அதை மதிப்புமிக்க நூலாகக் கருதியதோடு, திருக்குறளைப் போன்ற இலக்கியம் உருவாக வேண்டும் என்ற சீர்திருத்தத்தை உருவாக்க முனைந்தார்.

இலக்கியமானது அரசியல், சமூகம், பொருளாதாரம், சுயமரியாதை உள்ளிட்ட அனைத்துக் கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என விரும்பினார்.

**மொழியில் சீர்திருத்தம்:**

ஒரு மொழியின் பெருமையும், மேன்மையும், அவை எளிதில் கற்றுக் கொள்ளக் கூடியனவாக இருப்பதைப் பொறுத்தே அமைகின்றன. எனவே கால வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் எழுத்துக்களைச் சீரமைக்க தயங்கக் கூடாது என்று கருதினார் பெரியார்.

மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும் என்றார். அதற்கேற்ப, உயிர் எழுத்துக்களில் 'ஐ' என்பதை 'அய்' எனவும் 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். மேலும் மெய்யெழுத்துகளில் சில எழுத்துக்களைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்றார்.

கால வளர்ச்சிக்கு மொழி சீரமைப்புகள் தேவை என்று கருதினார். அவரது சீரமைப்புக் கருத்தின் சில கூறுகளை 1978ம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

**முடிவுரை:**

மொழி, இலக்கியம் பற்றிய பெரியாரின் சிந்தனைகள், அறிவுலகின் திறவுகோலாய்த் திகழ்ந்தது எனில் மிகையாகாது.

www.nammakalvi.com



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. தெற்காசியாவின் சாக்ரடீசு என்று புகழப்பட்டவர் யார்?
   அ) அறிஞர் அண்ணா ஆ) காமராசார்
   இ) ராஜாஜி ஈ) தந்தை பெரியார்
   விடை: ஈ) தந்தை பெரியார்

2. மன உறுதி படைத்த மக்களை உருவாக்க ................. இன்றியமையாதது.
   அ) மக்கட் செல்வம் ஆ) உறவு இ) அன்பு ஈ) பகுத்தறிவு
   விடை: ஈ) பகுத்தறிவு

3. மொழி என்பது போராட்டத்திற்குரிய ஒரு ................. ஆகும்.
   அ) போர்க்கருவி ஆ) வாயில் இ) துணை ஈ) இணை
   விடை: அ) போர்க்கருவி

4. ஈ.வே.ரா வுக்கு பெரியார் என்னும் பட்டம் வழங்கப்பட்ட நாள் எது?
   அ) 1938 நவம்பர் 14 ஆ) 1938 நவம்பர் 13
   இ) 1939 நவம்பர் 16 ஈ) 1938 நவம்பர் 12
   விடை: ஆ) 1938 நவம்பர் 13

5. தெற்கு ஆசியாவின் சாக்ரடீசு என்று ஈ.வெ.ரா வுக்கு பட்டம் வழங்கிய அமைப்பு எது?
   அ) யுனெஸ்கோ நிறுவனம் ஆ) காமன்வெல்த்
   இ) தெற்காசிய கூட்டமைப்பு ஈ) வெளிநாடுவாழ் இந்தியர் கூட்டமைப்பு
   விடை: அ) யுனெஸ்கோ நிறுவனம்.

6. தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் என்று பட்டம் வழங்கப்பட்ட நாள் ................. ஆகும்.
   அ) 26.05.1970 ஆ) 26.07.1970 இ) 24.06.1970 ஈ) 27.06.1970
   விடை: ஈ) 27.06.1970

7. சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?
   அ) 1921 ஆ) 1922 இ) 1925 ஈ) 1926
   விடை: இ) 1925

8. தந்தை பெரியாரின் சொந்த ஊர் .................
   அ) ஈரோடு ஆ) பொள்ளாச்சி இ) நாமக்கல் ஈ) சேலம்
   விடை : அ) ஈரோடு

9. பெரியார் என்றவுடன் நினைவுக்கு வருவது .................
   அ) அமைதி ஆ) பகுத்தறிவு இ) கோபம் ஈ) முதுமை
   விடை : ஆ) பகுத்தறிவு

www.nammakalvi.com



**10. பெரியார் பின்பற்றிய கொள்கை ..................**

அ) தலையிடாக் கொள்கை ஆ) வரிகொடாக் கொள்கை

இ) கடவுள் மறுப்புக் கொள்கை ஈ) கடவுள் சார்புக் கொள்கை

விடை : இ) கடவுள் மறுப்புக் கொள்கை

**11. பொருளாதார தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது அவசியம் என்று கூறியவர் ..................**

அ) பெரியார் ஆ) அண்ணா இ) காந்தி ஈ) அம்பேத்கார்

விடை : அ) பெரியார்

**12. 1938 இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ராவுக்கு வழங்கப்பட்ட பட்டம் ...............**

அ) பெண்ணினப் போர்முரசு ஆ) பெரியார்

இ) புத்துலகத் தொலை நோக்காளர் ஈ) சுயமரியாதைச் சுடர்

விடை : ஆ) பெரியார்

## குறுவினா

**1. பள்ளிகளில் கற்றுத் தரக் கூடாதனவாகப் பெரியார் கூறுவன யாவை?**

- அறிவியலுக்குப் புறம்பான செய்திகள்
- மூடப்பழக்கங்கள்

**2. சாதி என்ற கட்டமைப்புக் குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**

- சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது.
- மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது.
- மனிதர்களை இழிவுபடுத்துகிறது.
- அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்.

**3. தேர்வுமுறை குறித்த பெரியாரின் சிந்தனைகளை எழுதுக.**

மனப்பாடத்திற்கு முதன்மை அளிக்கும் தேர்வு முறையையும், மதிப்பெண்களுக்கு முதன்மை அளிக்கும் முறையையும் எதிர்ப்பதாக பெரியாரின் சிந்தனை அமைந்தது.

**4. தமிழ்மொழி குறித்த பெரியாரின் சிந்தனைகளை எடுத்தியம்புக.**

- இந்தியாவிலேயே பழமையான மொழி தமிழ்மொழியாகும்.
- இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்.

**5. திருக்குறளைப் பெரியார் ஏன் மதிப்புமிக்க நூலாகக் கருதினார்?**

திருக்குறளில் அறிவியல் கருத்துகளும் தத்துவக் கருத்துகளும், அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால் அதை மதிப்புமிக்க நூலாகப் பெரியார் கருதினார்.

**6. பெரியார் நடத்திய இதழ்கள் யாவை?**

குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)

www.nammakalvi.com



## சிறுவினா

**1. தந்தை பெரியாரின் சிறப்புப் பெயர்களைக் கூறுக.**

- பகுத்தறிவு பகலவன்
- சுயமரியாதைச் சுடர்
- தெற்காசிய சாக்ரடீசு
- பெண்ணினப் போர் முரசு
- வைக்கம் வீரர்
- புத்துலகத் தொலைநோக்காளர்
- ஈரோட்டுச் சிங்கம்

**2. கல்வி குறித்து பெரியாரின் சிந்தனைகள் யாவை?**

- சமூக வளர்ச்சிக்குக் கல்வியே மிகச் சிறந்த கருவி. கற்பிக்கப்படும் கல்வியானது,
- மக்களிடம் பகுத்தறிவு, சுயமரியாதை, நல்லொழுக்கம், சுய சிந்தனை ஆற்றல், தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

**3. தந்தை பெரியார் எவற்றையெல்லாம் எதிர்த்தார்?**

- இந்தித்திணிப்பு
- கள்ளுண்ணல்
- குலக்கல்வி திட்டம்
- குழந்தைத் திருமணம்
- சாதி அமைப்பு
- மணக்கொடை
- தேவதாசி முறை ஆகியவற்றை எதிர்த்தார்.

**4. பெரியார் விதைத்த விதைகள் யாவை?**

- கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு
- பெண்களுக்கான தனி இட ஒதுக்கீடு
- குடும்ப நலத்திட்டம்
- கலப்புத் திருமணம்
- சீர்திருத்த திருமணச் சட்டம் ஏற்பு ஆகியவையாகும்.

**5. பெண்கள் நலம் பற்றிய பெரியாரின் சிந்தனைகள் யாவை?**

- நாட்டு விடுதலையை விட பெண் விடுதலைதான் முதன்மையானது.
- கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஆண்களுக்கு நிகரான உரிமை பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.
- வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும்.
- பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் இருக்கக் கூடாது.
- நன்கு கல்வி கற்று, சுய உழைப்பில் பொருளீட்ட வேண்டும்.
- தெளிந்த அறிவுடனும் தன்னம்பிக்கையுடனும் திகழ வேண்டும்.
- கைம்பெண்களுக்கு மறுமணம் செய்ய வழிவகை காண வேண்டும்.
- குடும்பச் சொத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமையைப் பெண்களுக்கு வழங்க வேண்டும்.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

பக்கம்: 214

1. **"இன்று பெரியார் இருந்திருந்தால்" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.**

அவையில் கூடியிருக்கும் அனைவருக்கும், முதற்கண் என் அன்பான வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

இன்று உங்கள் முன் இந்த மேடையில் நான் பேச எடுத்துக்கொண்ட தலைப்பு என்ன தெரியுமா? "இன்று பெரியார் இருந்திருந்தால்" என்பதே ஆகும்.

பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைச் சுடர், தெற்காசியாவின் சாக்ரடீசு, வைக்கம் வீரர், பெண்ணினப் போர் முரசு, ஈரோட்டுச்சிங்கம், புத்துலகத் தொலை நோக்காளர் என்றெல்லாம் புகழப்பட்டவர் தந்தை பெரியார்.

அடிமை இருளில் மூழ்கிக் கிடந்த தமிழ் சமுதாயத்திற்கு மட்டுமல்ல பாரத தேசத்திற்கே, புதிய வெளிச்சம் பாய்ச்சியவர் எனில் மிகையாகாது. புதிய விடியலுக்கு தன் கொள்கையால் பூபாளம் இசைத்தவர்.

சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் புதிய சிந்தனை ஏற்படுத்திய பெரியார், இன்று இருந்தால், இன்றைய சமூக பண்பாட்டுச் சீர்கேடுகள், இன்றும் கல்வியில் உள்ள வேறுபாடுகள், பொருளாதார சீர்கேடுகள், நாகரிகமற்ற அரசியல் செயல்பாடுகள், சாதியினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வீண் சண்டைகள், குழப்பங்கள், ஆணவக் கொலைகள், பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றச்செயல்கள் அனைத்தும் அந்தப் பகுத்தறிவு பகலவனை ஒளி குன்றச் செய்திருக்கும்.

கல்வியில், வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு. பெண்களுக்கான இடஒதுக்கீடு பெண்களுக்கான சொத்துரிமை, குடும்பநலத்திட்டம், கலப்புத் திருமணம், சீர்திருத்த திருமண சட்ட ஏற்பு என அவர் விதைத்த விதைகள் சில வேரூன்றி இருக்கின்றன. சில முளைக்காமலே போய்விட்டன. இந்த நிலையில் இன்று பெரியார் இருந்திருந்தால்,

"மீண்டும் ஒரு புரட்சி, மீண்டும் ஒரு மதுவிலக்கு, மீண்டும் ஒரு மொழிப் புரட்சி" எனப் புதிய புரட்சிகளால் புதிய விடியலை ஏற்படுத்தியிருப்பார்.

ஆனால், இன்று அவர் இல்லை, அவர் கொள்கைகளை உணர்ந்த நாம், அவர் காட்டிய வழியில் புதிய உலகம் செய்வோம். வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முயல்வோம்.

சமுதாயம் மூடப்பழக்க வழக்கங்களில் இருந்து மீண்டெழ அரும்பாடுபட்ட அவரது பிள்ளைகளாகிய நாம் அச்செயலை புத்துணர்ச்சியுடன் செயல்படுத்துவோம். நன்றி! வணக்கம்!

2. **பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக!**

**நேர்காணலுக்கான வினாக்கள்**

- அய்யா! பகுத்தறிவு என்பதற்கு விளக்கம் தாருங்கள் அய்யா?
- மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? தெளிவு படுத்துங்களேன்.
- சாதியினால் மனித வாழ்விற்குப் பயன் உண்டா?
- சாதியும் மதமும் மனித சமுதாயத்தை ஒற்றுமை படுத்துகிறதா? பிரித்து வைக்கிறதா?
- கல்வியில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களாகத் தாங்கள் கருதுபவை யாவை?
- எத்தகைய நூல்கள் நம் மொழியில் படைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?
- உங்களுக்கு மிகவும் பிடித்தமான நூல் எது?

www.nammakalvi.com



- பெண்களை முன்னேற்ற உதவுவதற்கான வழிமுறைகள் யாவை?
- நீங்கள் சிக்கனத்திற்குச் சான்றாய் இருப்பவர் சிக்கனத்தின் அவசியம் பற்றிச் சில வார்த்தைகள் கூறுங்களேன்
- சமுதாயம் மூட பழக்கத்தில் இருந்து மீண்டெழ இன்றைய இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும்?
- இன்றைய அரசியல் தலைவர்கள் நாட்டை ஆள்பவர்களுக்கு உங்கள் அறிவுரைகள் யாவை?
- இன்றைய பத்திரிகைகள் இதழ்கள் ஊடகங்கள் பற்றி உங்கள் கருத்து யாது?

மாணவர்களே இதைப் போன்று இன்றைய சூழலில் நீங்கள் பெரியாரைச் சந்தித்தால் என்ன கேட்க விரும்புகிறீர்களோ அவற்றை வினாக்களாக்கி இத்துடன் இணைத்துக் கொள்ளுங்கள்

**3. "இன்றைய சமுதாயம் பெரியாரின் பாதையில் நடக்கிறதா? நடக்கவில்லையா? எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்துக.**

**கலந்துரையாடல்**

**கலந்துரையாடுபவர்கள்: முகிலன், கமலா, ஆசிரியர், அகிலன்.**

**ஆசிரியர்** : மாணவர்களே இன்று பெரியாரின் சிந்தனைகள் பற்றிய உரைநடையைப் பயின்றோம் அல்லவா?

**முகிலன்** : ஆம் ஐயா! இந்த உரைநடை மூலம் பெரியார் கூறிய கருத்துகள் அவர் காட்டிய பாதையை அறிந்து கொண்டோம்.

**ஆசிரியர்** : ஆம். அவர் காட்டிய பாதையில் இன்றைய சமூகம் நடக்கிறதா இல்லையா?

**கமலா** : இல்லை ஐயா.

**ஆசிரியர்** : ஏன் கமலா அப்படி சொல்கிறாய்.

**கமலா** : ஐயா பெரியார் உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாடு பார்க்கக்கூடாது என்றார். ஆனால் இன்றும் எங்கள் கிராமத்தில் சாதியின் அடிப்படையில் தான் எல்லாம் நடைபெறுகிறது இதிலிருந்தே தெரியவில்லையா? பெரியார் வழியில் நடக்கவில்லை என்று.

**முகிலன்** : சரியாகச் சொன்னாய் கமலா எங்கள் சிற்றூரில் கூட சாதியைக் காரணம் காட்டி மக்கள் இழிவுபடுத்தப்படுகிறார்கள்.

**கமலா** : அதுமட்டுமில்லை முகிலா! மணக்கொடை, வரதட்சணை கூடாது என்றார். ஆனால் எங்கள் உறவினர்களில் ஒரு பெண்ணுக்கு வரதட்சணை தரமுடியாமல் திருமணம் தள்ளிக்கொண்டே போகிறது. பின் எப்படி சமூகம் பெரியார் வழி நடக்கிறது என்று சொல்ல முடியும்.

**அகிலன்** : இரண்டு பேரும் பேசிக்கிட்டு இருக்கீங்க நான் கொஞ்சம் பேசலாமா?

**கமலா** : சொல்லு அகிலன்....

**அகிலன்** : "நீங்க கலப்புத் திருமணம் செய்யலாம், சாதிமறுப்புத் திருமணம் செய்யலாம்" என்றார். ஆனால் அப்படி யாராவது செய்தால் கொல்லப்படுகிறார்கள் என்ன செய்வது....

**முகிலன்** : இதுமட்டுமல்ல வேறுபாடற்ற கல்வி வேண்டும் என்றார். இன்றும் பணம் படைத்தவர்கள் நல்ல பள்ளியில் நல்ல தரமான வேறுபட்ட கல்வி கற்க முடிகிறது. சாதாரண ஏழை ஜனங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை தானே....

www.nammakalvi.com



**அகிலன்** : இப்படியே பேசிக்கொண்டே போகலாம் கமலா. நாம் பெரியாரின் கருத்துகளை நடைமுறைக்குக் கொண்டுவர முயல்வோம்.

**முகிலன்** : ஆம் அகிலன்! நன்கு படித்துத் தொலைநோக்குடைய அவருடைய சிந்தனைகள் அவர் கற்றுத் தந்த தன்மதிப்பு, சமத்துவம் ஆகியவற்றை திறவுகோலாகக் கொண்டு புதிய சமுதாயத்தைப் படைப்போம்.

**கமலா** : நாம் நினைத்தால் முடியாதது இல்லை. முயல்வோம் வெல்வோம்....

**ஆசிரியர்** : மிக்க மகிழ்ச்சி மாணவர்களே! நான் இன்று கற்றுக்கொடுத்தது வீணாகப் போவதில்லை....

※※⁂⁂⁂※※

*கவிதைப் பேழை*

# இயல் எட்டு — ஒளியின் அழைப்பு

## நுழையும் முன்:

புவிஈர்ப்பு விசையை எதிர்த்து விண்ணோக்கி விரைவது தாவரத்தின் தனித்துவம். வேர் வளர்க்கும் கதிரவன் ஒளியும் காற்றும் நீரும் பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் பாறையும் என எல்லாம் இணைந்தே இயற்கையைப் போற்றி வளர்க்கின்றன. போட்டியின்றி வாழ்க்கையில்லை; வலிகளின்றி வெற்றியில்லை. ஒன்றையொன்று அடுத்தும் படுத்தும் மென்மேலும் முன்னேறுவது இயற்கைக்கு மட்டுமன்று, வாழ்க்கைக்கும்தான்!

## நூல்குறிப்பு (நூல் வெளி):

- புதிய படைப்புச் சூழலில் மரபுக் கவிதையில் யாப்பு பிடியில் இருந்து விடுபட்ட கவிதைகள் புதுக்கவிதைகள் எனப்பட்டன. பாரதியாரின் வசனகவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ந. பிச்சமூர்த்தி ஈடுபட்டார். எனவே அவர் புதுக்கவிதையின் தந்தை என்று போற்றப்படுகிறார்.
- புதுக்கவிதையை இலகு கவிதை, கட்டற்ற கவிதை, விலங்குகள் இலா கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.

## ஆசிரியர் குறிப்பு:

- ந. பிச்சமூர்த்தி அவர்கள் 1900ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் பிறந்தார்.
- நடேச தீட்சிதர் காமாட்சி அம்மாள் இவர்தம் பெற்றோர் ஆவார். இவருக்கு வேங்கட மகாலிங்கம் என்று பெற்றோர் பெயரிட்டனர். எனினும் பிச்சை என்றே அழைத்தனர். அதுவே பின்னாளில் பிச்சமூர்த்தி ஆயிற்று.

www.nammakalvi.com



- ந. பிச்சமூர்த்தி தொடக்கக் காலத்தில் வழக்கறிஞராகவும் பின்னர் இந்து சமய அறநிலைய பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றினார். ஹனுமான், நவ இந்தியா ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராக இருந்தார்.
- மேலும் சுதேசமித்திரன், சுதந்திரச்சங்கு, தினமணி, மணிக்கொடி ஆகிய பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். இவர் புதுக் கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகம், கட்டுரைகள், ஆகிய இலக்கிய வகைமைகளைப் படைத்தவர்.
- இவருடைய முதல் சிறுகதை `ஸயன்ஸுக்கு பலி` என்பதாகும். மேலும் வேப்பமரம், வானம்பாடி போன்ற புகழ்பெற்ற பல சிறுகதைகளை எழுதியுள்ளார். பிச்சை, ரேவதி ஆகிய புனைபெயர்களில் எழுதியுள்ளார். 1932 இல் கலைமகள் இதழ் வழங்கிய பரிசை பெற்றுள்ளார்.
- இவரது கவிதைகள் பற்றி வல்லிக்கண்ணன் அவர்கள் “இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து அறிவுத் தெளிவுடன் நல்வாழ்வுக்கான தத்துவ உண்மைகளைக் காணும் முயற்சியே பிச்சமூர்த்தியின் கவிதை” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.
- “ஒளியின் அழைப்பு” என்னும் நம் பாடப் பகுதியில் அமைந்துள்ள கவிதை மணிக்கொடி இதழில் 1934இல் அக்டோபர் 28 வெளிவந்தது ஆகும்.

## வாழ்க்கைப் போர்

கமுகு மரம்(பாக்குமரம்) ஒன்று பெருமரங்களின் (விருட்சம்) இருள் போன்ற நிழல் நிறைந்த இடத்தில் முளைத்தது. தன் உயிர் அமுதமாகிய வெளிச்சம் இருந்தால் தானே தான் வளர முடியும் அப்பெருமரத்தின் நிழல் என்னும் இருளை கமுகுமரம் துளைக்க ஆரம்பித்தது. பெருமரத்தின் நிழலை வெறுத்தது. விருட்சங்களுக்கு மேலாக தன் உச்சிக் கிளையை உயர்த்த முயற்சித்தது. ஒளியாகிய உயிர்ப்பைத் (அமுதை) தேடியது. மீண்டும் மீண்டும் உயர முயற்சித்தது உயர்ந்தது உயரே.

கதிரவனின் ஒளிக்கதிர்களாகிய விரல்களின் அழைப்பைக் கண்டதும் பெருமரத்தின் இருட்டில் இருந்து கொண்டே தன் கிளைகளை வளைத்து நீட்டியது.

அமுதமாகிய தன் உணவாகிய ஒளியை வேண்டி கமுகு பெருமரங்களுடன் போட்டியிடுகிறது. அதுவே வாழ்க்கைப் போர். வாழ்க்கை உறுதி பெற வேண்டுமென்றால் போட்டியிட்டு, போரிட்டே ஆக வேண்டும்.

பெரு மரங்களை முட்டி மோதி மேலே செல்லும் துணிச்சலே இன்பம். முயற்சி உள்ளனவே வாழ்வில் மலர்ச்சி பெறும்.

கமுகு மரம் கடுமையாக மோதித் துணிச்சலான முயற்சிகளில் ஈடுபட்டது. நம்பிக்கை, தன்முனைப்போடு கூடிய போட்டியில் கமுகு வென்றது. பெருமரத்தை விஞ்சி வளர்ச்சி நடை போடுகிறது.

கமுகினைப் போலவே நாமும் அடர்ந்த துன்பங்கள், தடைகள், இடையூறுகள் வந்தாலும் தளராது முயல்வோம். கமுகு தலைநிமிர்ந்தது போல நாமும் நிமிர்வோம் உயர்வோம்.

**இலக்கணக் குறிப்பு:**

1. பிறவி இருள், ஒளியமுது, வாழ்க்கைப்போர் – உருவகங்கள்
2. பெருமரம் – பண்புத்தொகை
3. நம்பி – வினையெச்சம்

www.nammakalvi.com



**பகுபத உறுப்பிலக்கணம்**

| | |
|---|---|
| **போகிறது – போ + கிறு + அ + து**<br>போ – பகுதி<br>கிறு – நிகழ்கால இடைநிலை விகுதி<br>அ – சாரியை<br>து – படர்க்கை ஒன்றன்பால் விகுதி | **வளைத்து – வளை + த் + த் + உ**<br>வளை – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |
| **வேண்டி – வேண்டு + இ**<br>வேண்டு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி | **நீட்டி – நீட்டு + இ**<br>நீட்டு – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி |
| **மலர்ச்சி – மலர் + ச் + சி**<br>மலர் – பகுதி<br>ச் – சந்தி<br>சி – தொழிற்பெயர் விகுதி | |

# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **"முண்டி மோதும் துணிவே இன்பம்" – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது ______.**

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

விடை: இ) துணிவு

## குறுவினா

1. **கமுகு மரம் எதைத் தேடியது?**

பெருமரங்களுக்கு இடையே தோன்றிய கமுகு மரமானது, தான் வளர்ந்து வளம் பெறுவதற்கு, விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் (ஒளியமுதை) தேடியது.

## நெடுவினா

1. **வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?**

**முன்னுரை:**

போட்டி இன்றி வாழ்க்கை இல்லை. வலிகளின்றி வெற்றி இல்லை. ஒன்றையொன்று அடுத்தும், படுத்தும் மென்மேலும் முன்னேறுவது இயற்கைக்கு மட்டுமன்று வாழ்க்கைக்கும் தான் என்பதை ந. பிச்சமூர்த்தி அவர்கள் கமுகுமரம் வாயிலாக உணர்த்துகிறார்.

**கமுகு பிறந்த இடம்:**

அடர்ந்த இருள் போன்ற நிழல் பரப்புகின்ற பெருமரங்களின் இடையே கமுகு பிறந்தது. பெருமரங்களின் நிழல் என்னும் இருள் அதன் வளர்ச்சிக்குத் தேவையான ஒளியமுதைத் தடுத்தது. பெருமரங்களின் நிழலை வெறுத்த கமுகு தான் வளரத் தேவையான ஒளியமுதைப் பெற்று உயிர்ப்புப் பெற போராட துவங்கியது.

www.nammakalvi.com



**கமுகின் போராட்டம்:**

கமுகு மரம் கடுமையாகப் பெருமரங்களுடன் முட்டிமோதும் முயற்சியைத் தொடங்கியது. விண்ணிலிருந்து வரும் தன் உயிர்ப்பாகிய ஒளியமுதைத் தேடியது. மீண்டும், மீண்டும் உயர முயற்சித்தது. கதிரவனின் ஒளிக்கதிர்களாகிய விரல்களின் அழைப்பைக் கண்டது. பெருமரங்களின் இருட்டில் இருந்து கொண்டே தன் கிளையை வளைத்து ஒளியை நோக்கி நீட்டத் தொடங்கியது; வளர்ந்தது. பெரு மரங்களை முட்டி மோதும் துணிச்சலையும், முயற்சியையும் பெற்றதால் கமுகு வளைந்து, நெளிந்து, நீண்டு வளர்ந்தது. மலர்ச்சி பெற்றது.

**வாழ்க்கைப் போர்:**

வாழ்க்கையிலும் இருள் போன்ற நிழல் சூழ்ந்த நிலைகள் ஏற்படலாம். ஒளியமுதை நம்பி, வேண்டி, கமுகு துணிச்சலான முயற்சியில் ஈடுபட்டது போல, நாமும் வாழ்க்கைப் போரில் நம்பிக்கை தன்முனைப்பு, விடாமுயற்சி, உடையவர்களாய் இருந்தால் வாழ்வு மலர்ச்சி பெறும்.

**முடிவுரை:**

“பெருமரத்துடன் சிறுகமுகு போட்டியிடுகின்றது, அதுவே வாழ்க்கைப் போர். முண்டி போதும் துணிவே இன்பம் உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி”. இயற்கையின் போராட்டங்களையும், வாழ்வின் அனுபவங்களையும் இணைத்து அறிவுத் தெளிவுடன் வாழ்க்கைப் போரைச் சந்திப்போம்; முயல்வோம்; வெற்றி பெறுவோம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பொருத்துக.**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) | விண் | 1) பாக்குமரம் |
| ஆ) | ரவி | 2) சக்கரக்கால் |
| இ) | கமுகு | 3) சூரியன் |
| ஈ) | ஆரம் | 4) வானம் |

**விடை:**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) | விண் | 1) வானம் |
| ஆ) | ரவி | 2) சூரியன் |
| இ) | கமுகு | 3) பாக்குமரம் |
| ஈ) | ஆரம் | 4) சக்கரக்கால் |

**2. புதுக்கவிதையின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) மீரா ஈ) ந.பிச்சமூர்த்தி

விடை: ஈ) ந.பிச்சமூர்த்தி

**3. ந.பிச்சமூர்த்தி எழுதிய முதல் சிறுகதை எது?**

அ) சயன்ஸூக்கு பழி ஆ) சயன்ஸூக்கு பலி

இ) அறிவியல் உலகம் ஈ) அறிவியல் விருந்து

விடை: ஆ) சயன்ஸூக்கு பலி

**4. பிச்சை, ரேவதி என்ற புனைபெயர்களில் படைப்புகளை எழுதியவர் யார்?**

அ) கண்ணதாசன் ஆ) மீரா இ) தாராபாரதி ஈ) ந.பிச்சமூர்த்தி

விடை: ஈ) ந.பிச்சமூர்த்தி

www.nammakalvi.com



**5. கலைமகள் இதழ் வழங்கிய பரிசை ந.பிச்சமூர்த்தி பெற்ற ஆண்டு .............**

அ) 1932 ஆ) 1933 இ) 1934 ஈ) 1935

விடை: அ) 1932

**6. யாப்புப்பிடியில் இருந்து விடுபட்டவையே ............. ஆகும்.**

அ) மரபுக் கவிதை ஆ) சங்கப் பாடல் இ) காப்பியம் ஈ) புதுக்கவிதை

விடை: ஈ) புதுக்கவிதை

**7. ஒளியமுது என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?**

அ) உவமைத் தொகை ஆ) வினைத் தொகை

இ) உருவகம் ஈ) எண்ணும்மை

விடை: இ) உருவகம்

**8. உயிரின் முயற்சியே வாழ்வின் ............. ஆகும்.**

அ) தளர்வு ஆ) தடுமாற்றம் இ) மனமாற்றம் ஈ) மலர்ச்சி

விடை: ஈ) மலர்ச்சி

**9. "புதுக்கவிதைகள் தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் நூலை எழுதியவர் ...............**

அ) நெல்லைக்கண்ணன் ஆ)வல்லிக்கண்ணன்

இ) ஈரோடு தமிழன்பன் ஈ) ந. பிச்சமூர்த்தி

விடை : ஆ) வல்லிக்கண்ணன்

**10. பாரதியாரின் வசன கவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் _________.**

அ) ந. பிச்சமூர்த்தி ஆ) மீரா இ) வல்லிக்கண்ணன் ஈ) மு. மேத்தா

விடை : அ) ந.பிச்சமூர்த்தி

## குறுவினா

**1. ந.பிச்சமூர்த்தி கவிதைகள் குறித்து வல்லிக்கண்ணன் கூறுவன யாவை?**

இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து, அறிவுத் தெளிவுடன் நல்வாழ்க்கைக்கான மெய்யியல் உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள் என்று வல்லிக்கண்ணன் குறிப்பிட்டுள்ளார்.

**2. ந.பிச்சமூர்த்தி படைத்த இலக்கிய வகைமைகளைக் குறிப்பிடுக.**

- புதுக்கவிதை
- ஓரங்கநாடகங்கள்
- சிறுகதை
- கட்டுரைகள்

**3. ந.பிச்சமூர்த்தி துணையாசிரியராகப் பணியாற்றிய இதழ்கள் யாவை?**

- ஹனுமான்
- நவ இந்தியா

**4. புதுக்கவிதைக்குரிய வேறு பெயர்கள் யாவை?**

- இலகு கவிதை
- கட்டற்ற கவிதை
- விலங்குகள் இல்லாக் கவிதை
- கட்டுக்குள் அடங்காக் கவிதை

## சிறுவினா

**1. ந. பிச்சமூர்த்தி குறிப்பு வரைக.**

- புதுக்கவிதையின் தந்தை எனப் போற்றப்பட்டவர்.
- வழக்குரைஞராகவும், இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை அலுவலராகவும் பணியாற்றினார்.
- புதுக்கவிதை, ஓரங்க நாடகம், கட்டுரை ஆகிய இலக்கிய வகைமைகளைப் படைத்தவர்.
- பிச்சை, ரேவதி ஆகிய புனைபெயர்களில் எழுதினார்.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 216

**1. முயற்சி, நம்பிக்கை, வெற்றி ஆகியவற்றை உணர்த்தும் அறிஞரின் பொன்மொழிகளைத் தொகுக்க.**

| | | |
|---|---|---|
| உங்கள் பாதையை<br>நீங்களே தேர்ந்தெடுங்கள்<br>ஏனெனில்<br>வேறு எவராலும் உங்கள்<br>கால்களைக் கொண்டு<br>நடக்க முடியாது...! | எட்டி விடும் தூரத்தில்<br>வெற்றியும் இல்லை!<br>அதை விட்டுவிடும்<br>எண்ணத்தில்<br>நானும் இல்லை! | வாழ நினைப்பவனுக்கு<br>வானம் கூட<br>வாயிற் படிதான்! |

1. "நாம் நம்மால் முடியாது
என்று நினைக்கும் செயல்களை
யாரோ ஒருவர்
எங்கோ ஓர் இடத்தில்
அதை செய்து கொண்டுதான்
இருக்கிறார் என்பதை மறவாதே"
– அப்துல் கலாம்

2. எனது வெற்றிகளின் மூலம்
என்னை மதிப்பிடாதீர்கள்,
எத்தனை முறை நான் கீழே
விழுந்து மீண்டும் எழுந்தேன்
என்பதன் மூலம் மதிப்பிடுங்கள்
– நெல்சன் மண்டேலா

3. கண்ணெதிரே காணும்
ஒவ்வொருவரையும் நம்புவது
அபாயகரமானது. அதைக் காட்டிலும்
ஒருவரையும் நம்பாதிருப்பது மிகவும்
அபாயகரமானது
– ஆபிரகாம் லிங்கன்

4. முடியாது என்பது நம்
அகராதியில் கிடையாது
– நெப்போலியன்

5. நம்பிக்கையோடு உன்
முதலடியை எடுத்துவை
முழுப் படிக்கட்டையும்
நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை,
முதலில் படியில் ஏறு
– மார்டின் லூதர்கிங்

6. ஒரேயடியாக உச்சிக்கு ஏறிவிட
வேண்டும் என்ற முயற்சிதான்
உலகில் பல பெருந்துயருக்கும்
காரணமாயிருக்கிறது.
– சாமுவேல் பட்லர்

www.nammakalvi.com



7. எவராவது தான் தன்னுடைய
வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை
என்று நினைத்தால் அவர்கள் தாம்
தம் வாழ்வில் புதிய முயற்சிகளைச்
செய்து பார்த்ததில்லை என்று பொருள்
– ஐன்ஸ்டைன்

**2. "தன்னம்பிக்கையின் மறுபெயர்" நான் என்னும் தலைப்பில் ஒரு கவிதை படைத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

**தன்னம்பிக்கையின் மறுபெயர் நான்**

என் மறுபெயர்
என்ன தெரியுமா?...
தன்னம்பிக்கை...
எனக்குள் ஒருவன் இருக்கிறான்
அவன்தான் தன்னம்பிக்கை...
முயன்றவரை மட்டுமல்ல
முடியும் வரை முயல்வேன்
துவண்டு போக மாட்டேன்
துணிவுடன் செல்வேன்...
வேகமாய் செல்லமாட்டேன் விவேகத்துடன்
செல்வேன்
பொறாமைகளை போட்டிகளை எதிர்கொள்ள
பொறுமையுடன் பொறுப்புடன் ஓடுவேன்
ஏனெனில்
என் பெயர் தன்னம்பிக்கை...
தோல்வியில் சிரித்துப் பார்த்தேன்...
கற்றதை உணர்ந்து பார்த்தேன்...
ஆசையைத் துறந்து பார்த்தேன்...
அச்சத்தை மறந்து பார்த்தேன்...
வியர்வை சொட்ட உழைக்கப் பார்த்தேன்...
வெற்றிக்கனியைச் சுவைத்துப் பார்க்கிறேன்.
என் பெயர் தன்னம்பிக்கை...

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



கவிதைப் பேழை

# இயல் எட்டு

# தாவோ தே ஜிங் (லா வோட்சு)

**நுழையும் முன்:**

- இருப்பதும் இல்லாதிருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளுக்குள் உள்ளடங்கியதே வாழ்க்கை.
- ஒன்றைப் பிடித்த பிடியை விட்டு பிறிதொன்றை எட்டிப்பிடிக்கும் முன்னே ஏற்படும் வெற்றிட அனுபவங்களே வாழ்க்கையின் உருவத்தை வரைந்து வைத்து விடுகின்றன
- உண்டு, இல்லை என்ற சிந்தனைகளுக்கிடையே உண்டு என்பதை மட்டும் பயனுள்ளதாகக் கருதுவதைச் சீனக் கவிஞர் லாவோட்சு மறுக்கிறார்.
- எந்த ஒன்றும் உருவாக வேண்டுமென்றால், உண்டும் வேண்டும் இல்லையும் வேண்டும் என்ற கருத்தை நம் பாடல் பகுதியில் உள்ள கவிதை உணர்த்துகின்றது.

**நூல்குறிப்பு (நூல் வெளி):**

**தாவோ தே ஜிங் விளக்கம்**

- தாவோ தே ஜிங் என்பது சீன செவ்வியல் மெய்யியல் நூலாகும். லாவோட்சு என்ற அறிஞரால் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.
- இந்நூல் சீனாவின் "தாவோயியம்" என்னும் சமயத்துக்கு அடிப்படை நூலாகும். மிகுதியாக மொழி பெயர்க்கப்பட்ட நூல்களில் இதுவும் ஒன்று.

**தாவோ தே ஜிங் என்பதன் பொருள்:**

- தாவோ – வழி; தே – ஊக்கம், நேர்மை; ஜிங் – நூல்.
- தாவோ தே ஜிங் என்றால் "ஊக்கமும் நேர்மையும் வழியாகக் கொண்ட நூல்" ஆகும். இந்நூலில் போர், ஆயுதங்கள், அதிகாரங்கள் ஆகியவற்றுக்கு எதிரான கருத்துக்கள் அதிகம் உள்ளன.
- நேர்மையாக இருக்க வழிகாட்டுதல் வாழ்வின் நிலைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை வலியுறுத்தும் நூலாகும்.

**ஆசிரியர் குறிப்பு:**

- 'லாவோட்சு' சீனாவில் கிமு இரண்டாம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர்.
- சீனஞானி கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர் ஆவார்.
- அக்காலகட்டமானது சீனச் சிந்தனையின் பொற்காலமாக இருந்தது.
- லாவோட்சு "தாவோவியம்" என்ற சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர்.
- ஒழுக்கத்தை மையமாக வைத்துச் சிந்தித்தவர் கன்பூசியஸ்.
- இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தவர் லாவோட்சு.
- "தாவோவியம்" என்னும் தத்துவம் வாழ்வை மகிழ்ச்சியாக வாழ்வதையே வலியுறுத்துகிறது.
- "லாவோட்சு" என்பதற்கு (old mastet) பழமையான அறிஞர் என்று பொருள்.

**பாடலின் பொருள்:**

- பல ஆரங்களைக் கொண்டது சக்கரம். எனினும் அவற்றிடையே உள்ள வெற்றிடத்தை மையமாகக் கொண்டே அச்சக்கரம் சுழல்கிறது. மண்ணினால் அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாய் இருப்பது பானை. ஆயினும் பானையினுள் இருக்கும் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.
- வீட்டில் உள்ள சன்னலும் கதவும் கூட சுவரின் வெற்றிடம்தான். அதுவே காற்றையும், வெளிச்சத்தையும் தரப் பயன்படுகிறது.
- நான்கு சுவர்களுக்கும் இடையே உள்ள வெற்றிடம்தான், அறையாக நமக்குப் பயன்படுகிறது.
- நம் பார்வையில் படுகின்ற உருப்பொருள்கள் உண்மைதான் எனினும் உருப்பொருளின் உள் உள்ள வெற்றிடமே நமக்குப் பயன் உடையதாகிறது.
- வெற்றிடமும் பயன்தரும். இல்லை யென்றிருப்பதும் உள்ளதாய் மாறும். வெற்றிடமே பயன் உடையதாகும் எனில் வாழ்வில் வெற்றி பெற இருத்தலையும் பயன்படுத்துவோம் இருத்தலின்மையையும் பயன்படுத்துவோம்.
- வாழ்வில் நாம் பயன்படுத்தாத பகுதிகள் பல உண்டு. அவற்றை வெற்றிடம் என்று ஒதுக்கி விடுகிறோம். நாம் பயன்படுத்தாத நம் வாழ்வின் வெற்றிடமான பகுதிகளும், சுவை மிகுந்தவை பொருள் பொதிந்தவை. எனவே வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் சுவைத்து நம் வாழ்வை பொருளுடையதாக்குவோம்.

**இலக்கணக் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| **பாண்டம் பாண்டமாக** | – | அடுக்குத்தொடர் |
| **வாயிலும் சன்னலும்** | – | எண்ணும்மை |
| **முப்பதும்** | – | முற்றும்மை |

**பகுபத உறுப்பிலக்கணம்:**

**இணைகின்றன – இணை + கின்று + அன் + அ**

| | | |
|---|---|---|
| **இணை** | – | பகுதி |
| **கின்று** | – | நிகழ்கால இடைநிலை |
| **அன்** | – | சாரியை |
| **அ** | – | பலவின்பால் வினைமுற்று விகுதி |

**விடுகிறோம் – விடு + கிறு + ஓம்.**

| | | |
|---|---|---|
| **விடு** | – | பகுதி |
| **கிறு** | – | நிகழ்கால இடைநிலை |
| **ஓம்** | – | தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.**

**பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.**

அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?

ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

விடை: அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

www.nammakalvi.com



## குறுவினா

**1. தாவோ தே ஜிங் 'இன்னொரு பக்கம்' என்று எதைக் குறிப்பிடுகின்றார்?**

- இருப்பதும் இல்லாதிருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளை உடையது மானுட வாழ்க்கை. இருக்கின்றதான உருப்பொருளையே பயன் உடையதாய்க் கருதுகிறோம்.
- புலப்படாத இன்னொரு பக்கமாகிய இருத்தலின்மையை நாம் உணராமலே பயன்படுத்திக் கொண்டு தான் இருக்கிறோம்.
- **சான்று** : உருப்பொருளாகிய மண்ணால் செய்யப்பட்ட பாண்டம் இருத்தல், அதனுள் இருக்கும் இன்மையாகிய வெற்றிடத்தையே நீர் முதலியவற்றை நிரப்பிக் கொள்ள பயன்படுத்துகிறோம். எனவே இருத்தல் மட்டுமல்ல "இருத்தலின்மையும்" வாழ்வின் இன்னொரு பக்கம் என்று தாவோ தே ஜிங் கூறுகிறார்.

## சிறுவினா

**1. பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களை குறிப்பிடுக.**

- வான்மீகி வடமொழியில் எழுதிய இராமகாதையைத் தழுவி கம்பர் "கம்பராமாயணம்" எழுதினார்.
- வியாசர் வடமொழியில் எழுதிய மகாபாரதத்தைத் தழுவி, 'வில்லிபாரதம்', 'பாஞ்சாலி சபதம்' எழுதப்பட்டது.
- ஷத்ரிய சூடாமணி, ஸ்ரீபுராணம், சத்ய சிந்தாமணி ஆகிய வடமொழி நூல்களைத் தழுவி "சீவகசிந்தாமணி" எழுதப்பட்டது.
- Pilgrims progress நூலைத் தழுவி "இரட்சண்ய யாத்திரிகம் எழுதப்பட்டது.
- The secret way - என்னும் நூலைத் தழுவி" மனோன்மணியம்" எழுதப்பட்டது.
- புட்பந்தர் எழுதிய யசோதர சரிதம் என்னும் நூலைத் தழுவி "யசோதர காவியம்" எழுதப்பட்டது.

# கூடுதல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. லாவோட்சு வாழ்ந்த காலம் எது?**

அ) கி.மு. முதலாம் நூற்றாண்டு ஆ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு
இ) கி.பி. முதலாம் நூற்றாண்டு ஈ) கி.பி. இரண்டாம் நூற்றாண்டு

விடை: ஆ) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு

**2. லாவோட்சின் சமகாலத்தில் வாழ்ந்த சீன ஞானி யார்?**

அ) யுவான்சுவாங் ஆ) பாகியான் இ) தாவோதே ஜிங் ஈ) கன்பூசியஸ்

விடை: ஈ) கன்பூசியஸ்

**3. லாவோட்சின் சிந்தனை ............ எனப்படும்.**

அ) லாவோட்சின் பக்கம் ஆ) தாகாவியம்
இ) தாவோவியம் ஈ) லாவோட்சும் சினமும்

விடை: இ) தாவோவியம்

www.nammakalvi.com



**4. இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றவர் யார்?**

அ) கன்பூசியஸ் ஆ) யுவான்சுவாங் இ) லாவோட்சு ஈ) தாவோட்சு

விடை: இ) லாவோட்சு

**5. .............. மையமாக வைத்துக் கன்பூசியஸ் சிந்தித்தார்.**

அ) ஒழுக்கத்தை ஆ) அன்பை இ) பகுத்தறிவை ஈ) உறவை

விடை : அ) ஒழுக்கத்தை

**6. தாவோ தே ஜிங் என்னும் கவிதையை மொழிபெயர்த்தவர் ...............**

அ) சி.மணி ஆ) கவிமணி இ) ந.பிச்சமூர்த்தி ஈ) வல்லிக்கண்ணன்

விடை : அ) சி.மணி

## குறுவினா

**1. லாவோட்சு – குறிப்பு வரைக.**

- லாவோட்சு, சீனாவில் கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்தவர்.
- சீன மெய்யியலாளர் கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர்.
- 'தாவோவியம்' என்ற சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர்.

**2. சுவரின் வெற்றிடமாக விளங்குவன யாவை?**

வீட்டிலுள்ள சாளரமும் கதவும் கூடச் சுவரின் வெற்றிடமாகத் திகழ்கின்றன.

**3. வாழ்க்கையின் இருநிலைகள் எனப்படுவது யாது?**

- இருப்பதும்
- இல்லாதிருப்பதும்

**4. சீனச் சிந்தனையின் பொற்காலம் எனப்படுவது எது?**

லாவோட்சு, கன்பூசியஸ் வாழ்ந்த காலம்.

## சிறுவினா

**1. நம் வாழ்க்கையை எவ்வாறு பொருளுடையதாக்க வேண்டும்?**

வாழ்க்கை மிகவும் விரிவானது. அதன் சில பகுதிகளை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். உணர்கிறோம். நாம் பயன்படுத்தாத அந்தப் பகுதிகளும் சுவை மிகுந்தவை. பொருள் பொதிந்தவை. வாழ்க்கையின் அனைத்துப் பக்கங்களையும் சுவைத்து, நம் வாழ்க்கையைப் பொருளுடையதாக்குவோம்.

**2. இன்மையால்தான் நாம் பயனடைகிறோம் என்ற கவிஞரின் கருத்தை எடுத்தியம்புக.**

- இல்லை என்பது வடிவத்தை வரையறை செய்கிறது.
- குடம் செய்ய மண் என்பது உண்டு. இந்த உண்டும் இல்லையும் சேர்வதால்தான் குடத்தில் நீரை நிரப்ப முடியும். வெற்றிடம் இல்லாத குடத்தில் நீரை நிரப்ப முடியாது.
- ஆரங்களை விட நடுவிலுள்ள வெற்றிடம் சக்கரம் சுழல உதவுகிறது.
- குடத்து ஓட்டினைவிட உள்ளே இருக்கும் வெற்றிடமே பயன்படுகிறது.
- சுவர்களைவிட வெற்றிடமாக இருக்கும் இடமே பயன்படுகிறது.
- ஆகவே, 'இன்மை' என்று எதையும் புறக்கணிக்க வேண்டாம் என்று கவிஞர் கூறுகிறார்.

www.nammakalvi.com



## கற்பவை கற்றபின்

பக்கம்: 218

**1. நீங்கள் அறிந்த அயல்நாட்டு தத்துவ அறிஞர்களின் பெயர்களை எழுதுக.**

- சாக்ரடீஸ்
- பிளேட்டோ
- அரிஸ்டாட்டில்
- கன்பூசியஸ்
- கார்ல்மார்க்ஸ்
- லாவோட்சு
- டார்வின்

**2. ஜென் தத்துவக்கதை ஒன்றைப் படித்து அதுகுறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**கலந்துரையாடல்**

படித்த கதை : 'இந்தாப்பா உன் சந்தோஷம்'

**கலந்துரையாடுபவர்கள்: ஆசிரியர், மாலா, கமலா, குமார்.**

**ஆசிரியர்** : கதையைக் கேட்டீர்களா மாணவர்களே ...

**மாலா** : கேட்டோம் ஐயா!

**கமலா** : ஐயா! சந்தோஷம் எதில் என்பதை இக்கதை விளக்கமாக கூறியுள்ளது.

**ஆசிரியர்** : என்ன புரிந்துகொண்டீர்கள்...

**குமார்** : கோடீஸ்வரனுக்கு பணம் இருந்தும் மகிழ்ச்சியில்லை. எப்போதும் தன் பொன்னையும் பொருளையும் எண்ணிக் கொண்டிருக்கிறான்...

**ஆசிரியர்** : நிம்மதிக்கு என்ன செய்தான்.

**கமலா** : நாடு நாடாக ஊர் ஊராக சுற்றினான். பணத்தின் நினைவு வரும்போதெல்லாம் பதறி அடித்து திரும்பிப் போகின்றான்.

**மாலா** : பின் பொருள், பொன், பணம், எல்லாவற்றையும் மூட்டை கட்டி துறவியிடம் கொடுத்து சந்தோசம் கேட்கிறான்.

**குமார்** : துறவி மூட்டையுடன் ஓடுகிறார். சந்து பொந்தெல்லாம் ஓடிய துறவி மீண்டும் மரத்தடிக்கு வருகிறார்.

**கமலா** : மூட்டையை அவசர அவசரமாக கோடீஸ்வரன் பறித்துக் கொள்கிறான்.

**ஆசிரியர்** : மாணவர்களே செல்வம் படைத்தவனுக்கு அதனைக் கைவிட மனம் வருவதில்லை. அதனால் நிம்மதியும் அமைதியும் பெற முடியவில்லை. பொன், பொருள் இருப்பினும் அதில் பற்றற்ற மனதுடன் இருப்பதே மகிழ்ச்சி தரும்.

**3. மண் பாண்டம் செய்வோரைச் சந்தித்து அதன் உருவாக்கம் குறித்து அறிக.**

- மண்பாண்டம் செய்யும் தொழில் பழமையான தொழில்களில் ஒன்று.
- மண்பாண்டம்செய்பவர் குயவர் என்று அழைக்கப்பட்டனர்.
- நீர் தூய்மையாகப்பட்ட மண் சேர்த்துக் குழைக்கபட்ட களிமண்ணோடு வேறு சில கனிமங்களையும் சேர்ப்பது உண்டு. களிமண் கனமானது, அடர்த்தியானது, தூய்மையானது. இதனை நன்கு குழைத்து மேடையில் சக்கரத்தலை என்ற பகுதியில் வைக்கப்படும்.
- பானை செய்பவர் தேவைப்படும் வேகத்தில் சுழல் மேடையை சுழற்றுவார்.
- சுழற்றும் வேகத்தில் கீழ்நோக்கியும் உள்நோக்கியும் அழுத்தி ஒரே அளவிலான தடிமனில் பரவவிட்டு என்ன வடிவில் வேண்டுமோ! அவ்வடிவில் வடிவமைத்து, ஈரம் உலர்ந்தவுடன் குறிப்பிட்ட வெப்பநிலையில் சூளையில் சூடாக்கி மண்பாண்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

www.nammakalvi.com



*கவிதைப் பேழை*

# இயல் எட்டு
# யசோதர காவியம்

**நுழையும் முன்:**

- படித்து இன்புற மட்டுமின்றி வாழ்வியல் நெறிகளை அறிய உதவுவதும் இலக்கியங்களே.
- திருக்குறள் தொடங்கி அறம் சார்ந்த தனித்துவ இலக்கியங்கள் பல உண்டு.
- அவ்விலக்கியங்கள் காட்டும் வாழ்க்கைப் பாதையில் பயணித்தால் வாழ்வை வளமாக்கலாம்.

**நூல்குறிப்பு (நூல் வெளி)**

- நீலகேசி
- உதயண குமாரகாவியம்
- சூளாமணி
- நாககுமார காவியம்
- யசோதர காவியம்

இவை ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள் எனப்படும். ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றே யசோதர காவியம் ஆகும்.

வடமொழியில் ‘புட்பதந்தர்’ எழுதிய ‘யசோதர சரிதம்’ என்னும் நூலைத் தழுவி யசோதர காவியம் எழுந்தது.

**இந்நூலின் கண்**

“உயிர்க்கொலை தீது
சிற்றின்பத்தின் சிறுமை
பேரின்பத்தின் பெருமை”

என்னும் கருத்துக்கள் யசோதர காவியத்தில் வலியுறுத்தப்படுகின்றன. யசோதர காவியத்தில் பின்னோக்கு உத்தி கையாளப்பட்டுள்ளது.

- இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர்.
- யசோதர காவியம் ‘யசோதரன்’ என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.
- இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது.
- இந்நூலில் 320 பாடல்கள் உள்ளன.

**பாடலின் பொருள்:**

**காக்க வேண்டிய நன்னெறிகள்**

- நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்.
- நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.
- ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்.
- இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால், தாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.

www.nammakalvi.com



**இலக்கணக் குறிப்பு:**

ஆக்குக, போக்குக, நோக்குக, காக்க – வியங்கோள் வினைமுற்றுகள்

**பகுபத உறுப்பிலக்கணம்:**

**போக்குக – போக்கு + க**

**போக்கு** – பகுதி

க – வியங்கோள் வினைமுற்று விகுதி

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. "ஞானம்" என்பதன் பொருள் யாது?**

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

விடை: ஈ) அறிவு

### குறுவினா

**1. யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?**

யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன், அவந்தி நாட்டு மன்னனாகிய "யசோதரன்" ஆவார்.

### சிறுவினா

**1. நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?**

- நாம் செய்கின்ற செயல்கள் பிறருக்குப் பயன்தரத்தக்கச் செயலாக இருத்தல் வேண்டும்.
- "ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக".
  நம்மிடம் உள்ள தீய நெறிகளை, பண்புகளை நீக்க விரும்பினால் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.
- "போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக".
  மெய்யறிவு நூல்களை ஆராய்ந்து ஞானம் பெற வேண்டும்.
- "நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக".
  நாம் மேற்கொண்ட நற்செயல்களாகிய விரதத்தைக் காக்க வேண்டும்.
- "காக்குவது ஏதெனில் விரதம்"
  என்று நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை யசோதர காவியம் கூறுகிறது.

**2. யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிடுக.**

**அறத்தை ஆக்குக:**

பின்னாளில் செய்யலாம் என்று எண்ணாது அறஞ் செய்க என்று (36வது) குறள் கூறுகிறது.

"அன்றறிவாம் எண்ணாது அறஞ்செய்து மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

**வெகுளி போக்குக:**

யாரிடத்தும் கோபம் கொள்ளாமல் சினத்தை மறந்துவிட வேண்டும் என்று (குறள் 303) கூறுகிறது.

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்".

www.nammakalvi.com



**ஞானம் நோக்குக:**

குற்றமில்லாத அறிவைக் கண்டவர்க்கு அறியாமை நீங்கி இன்பம் கிட்டும் என்று (குறள் 352) கூறுகிறது.

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு".

**விரதம் காக்க:**

விரதம் என்றால் நன்னெறி. தீய செயல்கள் தீயைப் போல் தீமைதரும், எனவே கொடிதான தீமையை விட்டு விலகி நன்னெறி பற்றுக என்று (202) குறள் கூறுகிறது.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்".

இவையே யசோதர காவியமும் திருக்குறளும் குறிப்பிடும் வாழ்க்கை நெறிகள் ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?**

அ) உதயகுமாரன் ஆ) யசோதரன் இ) சீவகன் ஈ) சனகன்

விடை: ஆ) யசோதரன்

2. **யசோதரன் எந்நாட்டு மன்னன்?**

அ) மாளவம் ஆ) மகதம் இ) கலிங்கம் ஈ) அவந்தி

விடை: ஈ) அவந்தி

3. **யசோதர காவியத்தின் சருக்கங்கள் எத்தனை?**

அ) ஐந்து ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

விடை: அ) ஐந்து

4. **'ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்கு' என்று குறிப்பிடும் இலக்கியம் .............**

அ) கலித்தொகை ஆ) யரோதர காவியம் இ) நன்னூல் ஈ) புறநானூறு

விடை : ஆ) யசோதர காவியம்

5. **யசோதர காவியம் ............. மொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப் பெற்றதாகும்.**

அ) வட ஆ) கன்னட இ) சிந்தி ஈ) தெலுங்கு

விடை : அ) வட

6. **யசோதர காவியம் ............. நூல்களில் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) ஐம்பெருங்காப்பியம் ஈ) ஐஞ்சிறுகாப்பியம்

விடை: ஈ) ஐஞ்சிறுகாப்பியம்

www.nammakalvi.com



**7, பொருத்துக.**

| சொல் | பொருள் |
|---|---|
| அ) அறம் | 1) சினம் |
| ஆ) வெகுளி | 2) நன்நெறி |
| இ) ஞானம் | 3) நற்செயல் |
| ஈ) விரதம் | 4) அறிவு |

**விடை:**

| சொல் | பொருள் |
|---|---|
| அ) அறம் | 1) நற்செயல் |
| ஆ) வெகுளி | 2) சினம் |
| இ) ஞானம் | 3) அறிவு |
| ஈ) விரதம் | 4) நன்நெறி |

## குறுவினா

**1. யசோதர காவியம் – குறிப்பு வரைக.**

- ஐஞ்சிறு காப்பிங்களுள் ஒன்று.
- இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை.
- இந்நூல் 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது.
- 5 சுருக்கங்களைக் கொண்டது.

**2. ஐஞ்சிறு காப்பியங்கள் யாவை?**

- நீலகேசி
- சூளாமணி
- யசோதர காவியம்
- உதயண குமார காவியம்
- நாககுமார காவியம்

## கற்பவை கற்றபின்

பக்கம்: 219

**1. தொடர்களை ஒப்பிட்டுக் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**அறம் செய விரும்பு** : ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக.

**ஆறுவது சினம்** : போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக.

**ஆசிரியர்** : நாம் இப்போது கற்ற ஆக்குவது ஏதெனில்... என்னும் அடிக்கு இணையான தொடர் ஏதாவது நினைவு வருகிறதா குழந்தைகளே...

**கலா** : ஐயா எனக்கு ஒரு தொடர் ஞாபகம் வருகிறது சொல்லட்டுமா ஐயா.

**ஆசிரியர்** : சொல்லு கலா...

**கலா** : ஔவையார் கூறிய "அறம் செய விரும்பு" ஐயா...

**ஆசிரியர்** : மிகவும் சரியாகச் சொன்னாய் கலா.

**மாலா** : அய்யா கலா கூறியதும் நீங்கள் நடத்தியதும் ஒரே கருத்தா ஐயா...

**ஆசிரியர்** : ஆமாம். மாலா ஔவையார் "நீ எச்செயலைச் செய்ய விரும்பினாலும் அது அறம் செய்வதாக இருத்தல் வேண்டும் என்று விரும்பு" என்கிறார்...

**கலா** : இரண்டாவது தொடர் ஐயா...

**ஆசிரியர்** : ஆறுவது சினம் – வெகுளி போக்குக. ஔவையார் மனதை சிறிது நேரம் அமைதியாக கட்டுப்படுத்தினால் தானாகவே சினம் ஆறி விடும் என்று உணர்த்துகிறார்.

யசோதர காவியம் "சினத்தை முழுவதுமாக கைவிட வேண்டும்" என்பதை வலியுறுத்தும் விதமாக "போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக" என்று கூறுகிறது.

※※⁂⁂⁂※※

*விரிவானம்*

இயல் எட்டு

# மகனுக்கு எழுதிய கடிதம்

## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. மொழியின் விரல் பிடித்து நடக்க பழகிக் கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா. முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

கடித செய்தி என்பது உயிர்ப்புள்ள மொழி. செய்தியை அளிப்பவருக்கும், பெறுபவருக்குமான உறவுப் பாலத்தை உறுதியாக்குகிறது. தாயுமானவனாகத் திகழ்ந்த முத்துக்குமார் அவர்கள் தம் மகனுக்கு எழுதிய கடிதத்தில் அமைந்துள்ள செய்திகளை அறிவோம்.

**குழந்தைப் பருவமும் – உலக வாழ்வும்:**

என் செல்லப் பூங்குட்டியே! நீ குழந்தையாய் இருந்தாய்; அழுதாய்; சிரித்தாய்; குப்புறக்கவிழ்ந்து தலைநிமிர்ந்து, சாகசம் கொண்டாடினாய். தரையெல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய்; எழுந்தாய்; விழுந்தாய்; நடந்தாய்; ஓடினாய்.

இந்த உலக வாழ்வும் இப்படித்தான். சிரிக்க வேண்டும், சிணுங்க வேண்டும், குப்புறக்கவிழ்ந்தும், தலைநிமிர்ந்தும் சாகசம் செய்தல் வேண்டும். தவழ வேண்டும், எழவேண்டும், விழவேண்டும், மீண்டும் எழ வேண்டும், இந்த நாடகத்தை நீ வெவ்வேறு வடிவங்களில் உலக வாழ்வில் நடிக்கத்தான் வேண்டும்.

**அனுபவமே கல்வி:**

கல்வியில் தேர்ச்சி கொள்ள வேண்டும், அதே நேரம் அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள். தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதை விட தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவக் கல்வியே இவ்வுலகில் வெற்றியுடன் வாழ பயன்படும் சூத்திரம் ஆகும்.

**அன்பாக இரு:**

எங்கும், எதிலும் எப்போதும் அன்பாய் இரு. அன்பை விட உயர்ந்தது இவ்வுலகில் வேறு எதுவுமே இல்லை. உன் பேரன்பால் இந்தப் பிரபஞ்சத்தை நனைத்துக் கொண்டே இரு. உறவுகளை விட மேன்மையானது நட்பு மட்டுமே, உன் அன்பால் நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொள். உன் வாழ்வு அன்பாலும், நட்பாலும் நேராகும்.

**உனக்கான காற்றை நீயே உருவாக்கு:**

என் மகனே மாநகரத்தில் நீ வாழ்க்கை முழுக்கக் கோடைகாலங்களையும், வெவ்வேறு வடிவங்களில் கொடிய தேள்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். எப்போதும் உன் தகப்பன் உன் அருகில் அமர்ந்து விசிறி கொண்டிருக்க முடியாது. உனக்கான காற்றை நீயே உருவாக்கு.

www.nammakalvi.com



**புத்தகங்களை நேசி:**

புத்தகங்களை நேசிக்கத் தவறாதே. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள் உன் உதிரத்தில் காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும்.

**முடிவுரை:**

இக்கருத்துக்கள் அனைத்தும் முத்துக்குமாரின் மகனுக்கு மட்டுமல்ல. இதனைப் படிக்கின்ற ஒவ்வொரு மாணவனுக்கும், ஒவ்வொரு குழந்தைக்கும், வளர்வதற்கும், உயர்வதற்கும், ஏற்ற கருத்துக்கள் ஆகும் என்பதை எவராலும் மறுக்க இயலாது.

## கற்பவை கற்றபின்

பக்கம்: 222

**1. முத்துக்குமார் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தைப் போல நீங்கள் யாருக்குக் கடிதம் எழுத விரும்புகிறீர்களோ அப்படியொரு ஒரு கடிதம் எழுது.**

**தங்கைக்கு....**

**அன்புள்ள தங்கைக்கு அண்ணா எழுதுவது,**

நலமா? பதின்பருவத்தில் இருக்கும் உனக்கு இக்கடிதம் மூலம் சில கருத்துகளை தெரிவிக்கவும், சிலவற்றை உன்னுடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறேன்.

நாம் சிறு வயதில் இருக்கும் போது பல கஷ்டங்களை அனுபவித்தது உண்டு. துன்பங்களிலும், வறுமையிலும், துவண்டு போகாத நம் தந்தை கண்ணெனத் தகும் கல்வியை எனக்குத் தடையின்றி தந்தார். நீயும் இன்று படித்துக் கொண்டிருக்கிறாய். நானும் பணியில் சேர்ந்து விட்டேன். நான் உழைக்கிறேன் ஒய்வெடுங்களென்றால் நம் தந்தை அதற்கு உடன்படுவதில்லை.

நம் பெற்றோரின் உழைப்பின் பயனாகிய நல்வாழ்வை நாம் அறுவடை செய்து கொண்டிருக்கிறோம். அன்புத் தங்கையே நீ பத்திரமாகவும், பக்குவமாகவும் இருக்க வேண்டிய தருணம் இது. கல்வியிலும் நம் குடும்ப நிலையிலும் மட்டுமே உன் கவனம் இருத்தல் வேண்டும்.

கவனச் சிதறல்கள் ஏற்படா வண்ணம் நல்ல புத்தகங்களை வாசி, பெற்றோரை நேசி, இறைவனை மறவாது வழிபடு. நற்பண்புகளை வளர்த்துக்கொள். பெண்ணிற்கு எதற்குப் பணி? என்று வீட்டிலே இருந்து விடாதே. அடுத்த ஆண்டு உன் பட்டப்படிப்பு முடிந்து விடும் அல்லவா! உனக்கு பிடித்தமான பணியைச் செய்ய உன்னை ஆயத்தப்படுத்திக் கொள். பொருளாதார சுதந்திரமும், சமூக பாதுகாப்பு வழங்குவதும் கல்வியும், பணியுமே. நாளை உன் பிறந்த நாள் அல்லவா? அன்புத் தங்கையே வாழ்வில் அனைத்து நலங்களும் பெற்று வளமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

*அன்புடன் அண்ணன்*

*இரகு. இரா*

www.nammakalvi.com



**2. வகுப்பில் நீங்கள் தேர்ந்தெடுத்த நண்பனின் சிறந்த பண்பைப் பாராட்டியும், அவர் மாற்றிக் கொள்ள வேண்டிய பண்பையும் பெயரைக் குறிப்பிடாமல் கடிதமாக எழுதிப் படித்துக் காட்டுக.**

**அன்புள்ள நண்பா,**

உன் நற்பண்பை பாராட்டும் வகையிலும் நீ உன்னில் இருந்து நீக்க வேண்டிய, மாற்றிக் கொள்ள வேண்டிய பண்புகளைக் குறித்தும் நீ உணர்ந்து கொள்ளும்படியும், உணர்த்தும் படியும் இம்மடலை வரைந்து வாசிக்கிறேன்.

நண்பா உன்னை எண்ணி பார்க்கும் போதெல்லாம் என்னுள் மகிழ்வும், பெருமிதமும் ஊற்றெடுக்கும். ஆம் நீ அனைவருக்கும் உதவி செய்யும் நற்பண்பினைப் பெற்றிருக்கிறாய் அல்லவா! அதை நினைத்துத்தான் பெருமிதம் பொங்கும்.

பிறருக்குத் தாமாகவே ஓடிச் சென்று உதவும் பண்பு, எல்லோரிடத்திலும் இருப்பதில்லை. ஆனால் நீ இந்த பண்பை இயல்பிலே பெற்றிருப்பதால் நல்ல நண்பர்கள் உனக்குக் கிடைத்து இருப்பதோடு, பலருடைய பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றுள்ளாய் பாராட்டுக்கள்.

அதேவேளையில், நீ திருத்திக் கொள்ளும் பொருட்டு உன்னிடம் உள்ள ஒரு சிறு குறையைச் சுட்டிக் காட்டுவது நல்ல நண்பனாகிய என் கடமை எனக் கருதுகின்றேன்.

மகிழ்ச்சியாக உணவருந்திக் கொண்டிருக்கும் போது சிக்கிக் கொண்டு எரிச்சல் தரும் மிளகாய் போல் உன்னிடம் முன்கோபமாகிய குணம் உள்ளது. நாம் எத்தனை நன்மைகள் செய்தாலும் நம்மிடம் உள்ள சினம் என்னும் குணம் எல்லா நற்பண்புகளையும் அழித்து விடும்.

உலகத்தாருக்கும் நாம் செய்த நன்மைகளை, நம் சினமானது மறைத்து விடும். நற்பண்பு வெளியில் தெரியாமல் நம் எதிர்மறை குணம் மட்டுமே பேசு பொருளாக மாறி விடும் எனவே அன்பு நண்பா "சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லியை" நீ மாற்றிக் கொண்டால் உன்னத மனிதனாய் பேரும், புகழும் பெறுவாய்.

வாழ்த்துகள்.

அன்புடன் ஆருயிர் நண்பன்,

........

※※⁂⁂⁂※※

www.nammakalvi.com



*கற்கண்டு*

# இயல் எட்டு யாப்பிலக்கணம்

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது – இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?**

அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு

விடை : ஈ) பிறப்பு

### குறுவினா

1. **அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

அசை இரு வகைப்படும். அவை நேரசை, நிரையசை ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **மரபுக் கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணம் எது?**

அ) சொல் ஆ) பொருள் இ) யாப்பு ஈ) அணி

விடை: இ) யாப்பு

2. **சீர் எத்தனை வகைப்படும்?**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

விடை: இ) நான்கு

3. **காய்ச்சீர்களை .............. என்று அழைக்கிறோம்.**

அ) கலித்தளை ஆ) இயற்சீர்கள்
இ) வெண்சீர்கள் ஈ) ஒன்றிய வஞ்சித்தளை

விடை: இ) வெண்சீர்கள்

4. **தளையின் வகைகள் எத்தனை?**

அ) எட்டு ஆ) ஏழு இ) ஆறு ஈ) ஐந்து

விடை: ஆ) ஏழு

5. **இரண்டும், இரண்டிற்கும் மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து வருவது .............. ஆகும்.**

அ) சீர் ஆ) அடி இ) தளை ஈ) தொடை

விடை: ஆ) அடி

www.nammakalvi.com



**6. அடியின் வகைகள் எத்தனை?**

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

விடை: இ) ஐந்து

**7. தொடை என்பதன் பொருள் யாது?**

அ) எடுத்தல் ஆ) தொடுத்தல் இ) முடித்தல் ஈ) எழுதுதல்

விடை: ஆ) தொடுத்தல்

**8. தொடையின் வகைகள் எத்தனை?**

அ) எட்டு ஆ) பத்து இ) ஏழு ஈ) ஐந்து

விடை: அ) எட்டு

**9. பொருத்திக் காட்டுக:**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | நேர் | – | 1. | பிறப்பு |
| ii) | நிரை | – | 2. | காசு |
| iii) | நேர்பு | – | 3. | மலர் |
| iv) | நிரைபு | – | 4. | நாள் |

அ) 3, 4, 2, 1 ஆ) 4, 3, 2, 1

இ) 2, 1, 4, 3 ஈ) 4, 2, 3, 1

**விடை : ஆ) 4, 3, 2, 1**

**10. பொருத்திக் காட்டுக:**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | மா முன் நேர் | – | 1. | நிரையொன்றாசிரியத்தளை |
| ii) | விள முன் நிரை | – | 2. | நேரொன்றாசிரியத்தளை |
| iii) | மா முன் நிரை | – | 3. | வெண்சீர் வெண்டளை |
| iv) | காய் முன் நேர் | – | 4. | இயற்சீர் வெண்டளை |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

விடை : ஆ) 2, 1, 4, 3

**11. காய் முன் நிரை வருவது ...............**

அ) கலித்தளை ஆ) இயற்சீர் வெண்டளை

இ) வெண்சீர் வெண்டளை ஈ)ஒன்றிய வஞ்சித்தளை

விடை : அ) கலித்தளை

**12. ஆறுசீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது ...............**

அ) அளவடி ஆ) நெடிலடி இ) கழிநெடிலடி ஈ) சிந்தடி

விடை : அ) கழிநெடிலடி

**13. வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கொஞ்சும் –**
**இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள தொடைநயம் ________.**

அ) எதுகை ஆ) இயைபு இ) மோனை ஈ) அந்தாதி

விடை : ஆ) இயைபு

www.nammakalvi.com



14. **ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல் – இவ்வடிகளில் இடம்பெற்ற தொடை நயங்கள் ...............**

அ) எதுகை, மேனை ஆ) அளபெடை, இரட்டை

இ) இயைபு, முரண் ஈ) அந்தாதி, செந்தொடை

விடை : அ) எதுகை, மோனை

15. **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று – இவ்வடிகளில் இடம்பெற்ற தொடை நயம் ...............**

அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) அந்தாதி

விடை : அ) எதுகை

## குறுவினா

1. **யாப்பின் உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - யாப்பின் உறுப்புகள் ஆறு ஆகும்.
   - அவை: எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியனவாகும்.
2. **யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - மூன்று வகைப்படும்
   - குறில், நெடில், ஒற்று என்பனவாகும்.
3. **அசை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?**
   - எழுத்துகளால் ஆனது ‘அசை’ எனப்படும்.
   - ஒரெழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது ‘அசை’ ஆகும்.
   - இது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.
4. **சீர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - சீர்கள் நான்கு வகைப்படும்.
   - அவை: ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர்.
5. **ஈரசைச் சீர்களுக்குரிய வேறுபெயர்கள் யாவை?**
   - இயற்சீர்
   - ஆசிரிய உரிச்சீர்

## சிறுவினா

1. **அடிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - அடிகள் ஐந்து வகைப்படும்.
   - அவையாவன: இரண்டு சீர்களை உடையது குறளடி
   - மூன்று சீர்களை உடையது சிந்தடி
   - நான்கு சீர்களை உடையது அளவடி
   - ஐந்து சீர்களை உடையது நெடிலடி
   - ஆறும் அதற்கு மேற்பட்ட சீர்களை உடையது கழிநெடிலடி முதலியனவாகும்.

www.nammakalvi.com



**2. தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

தொடை எட்டு வகைப்படும். அவையாவன:

- மோனை
- எதுகை
- இயைபு
- முரண்
- இரட்டை
- அளபெடை
- அந்தாதி
- செந்தொடை

## கற்பவை கற்றபின்

பக்கம்: 225

**1. உமக்குப் பிடித்த திருக்குறளை அலகிட்டு அதன் வாய்பாடு காண்க.**

**குறள்**

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

| எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | பிறர்/நா/ணத் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2. | தக்/கது | நேர் நிரை | கூவிளம் |
| 3, | தான்/நா/ணா | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4, | னா/யின் | நேர் நேர் | தேமா |
| 5, | அறம்/நா/ணத் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6, | தக்/க | நேர் நேர் | தேமா |
| 7, | துடைத்/து | நிரைபு | பிறப்பு |

குறிப்பு: ★ நெடில் எழுத்து வந்தால் தனியாகவும், குறிலுடன் மெய்யெழுத்து வந்தால் தனியாகவம், இரு குறில் எழுத்துடன் மெய்யெழுத்து வந்தால் தனியாகவும் பிரிக்க வேண்டும். அல்லது இரு குறில் எழுத்தையும் தனியாகப் பிரிக்க வேண்டும். ஆய்த எழுத்தையும் மெய்யெழுத்தாகவே கணக்கிட வேண்டும். ( ) அடைப்புக் குறியிட்ட எழுத்தை அலகிடலில் சேர்க்கக் கூடாது.

★ மெய்யெழுத்தை நீக்கி ஓர் எழுத்து மட்டும் இருந்தால் நேரசை என்றும் மெய்யெழுத்தை நீக்கி இரண்டு எழுத்து இருந்தால் நிரையசை என்றும் கணக்கிட வேண்டும்.

விடல் - இரு எழுத்து - நிரை

கண் - ஒரு எழுத்து - நேர்

**2. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

| எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1. | ஒழுக்/கம் | நிரை நேர் | புளிமா |
| 2. | விழுப்/பம் | நிரை நேர் | புளிமா |
| 3, | தர/லான் | நிரை நேர் | புளிமா |

www.nammakalvi.com



| | | | |
|---|---|---|---|
| 4, | ஒழுக்/கம் | நிரை நேர் | புளிமா |
| 5, | உயி/ரினும் | நிரை நிரை | கருவிளம் |
| 6, | ஓம்/பப் | நேர் நேர் | தேமா |
| 7, | படும் | நிரை | மலர் |

இக்குறட்பாவானது மலர் என்ற வாய்பாட்டில் முடிந்துள்ளது.

**2. பின்வரும் பாடல்களில் பயின்றுவரும் தொடைநயங்களை எடுத்து எழுதுக.**

கொண்டல்கோபுரம் அண்டையில்கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனக மூன்றில் அனம் விளையாடும்.

விண்டபூமது வண்டலிட்டு ஓடும்
வெயில் வெய்யோன் பொன்னெயில் வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே

**இப்பாடலில் பயின்று வரும் தொடை நயங்கள்**

- மோனை நயம்
- எதுகை நயம்
- இயைபுத் தொடை நயம்

**செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை எனப்படும்.**

**சான்று:**

- கொண்டல் – கொடிகள்
- கண்ட – கனக
- அண்டர் – அழகர்

**செய்யுளில் அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகையாகும்.**

**சான்று:**

- கொண்டல் – கண்ட
- விண்ட – அண்டர்

**செய்யுளின் அடிகள் தோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.**

**சான்று:**

- அண்டையில் கூடும்
- படி தர மூடும்
- தண்டலை நாடும்
- அனம் விளை யாடும்

இவ்வாறு இயைந்து வருவதால் இயைபு ஆகும். இப்பாடலில் மோனை, எதுகை, இயைபுத் தொடை ஆகிய நயங்கள் உள்ளன.

**வினாக்கள்:**

**1. உங்கள் வீட்டில் உள்ளவர்களின் பெயர்களை நேர்நிரை அசைகளாகப் பிரித்துப் பார்க்க.**

- மேகலா – மே/கலா – நேர் நிரை
- குமரன் – கும/ரன் – நிரை நேர்
- பிரியா – பிரி/யா – நிரை நேர்
- அமிழ்தினி – அமிழ்/தினி – நிரை நிரை

**2. மூவசைச் சீரில் அமைந்த பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.**

- இரா / சரா / சன்
- மதி / மா / றன்
- மணி / மா / றன்
- மணி / கண் / டன்

**3. "தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்"
இக்குறட்பாவில் பயின்று வரும் மோனை, எதுகைகளைக் கண்டறிக.**

- தம் பொருள் – தம் தம்} முதல் எழுத்து ஒன்றி மோனை பயின்று வருகிறது. **(அடிமோனை)**
- தம் பொருள் – தம் தம் இரண்டாவது எழுத்து ஒன்றி எதுகையும் பயின்று வருகிறது.**(அடிஎதுகை)**

**4. தளையின் வகைகளை எழுதுக.**

தளையின் வகைகள் ஏழு ஆகும். அவை:

- நேரொன்றாசிரியத் தளை
- நிரையொன்றாசிரியத் தளை
- இயற்சீர் வெண்டளை
- வெண்சீர் வெண்டளை
- கலித்தளை
- ஒன்றிய வஞ்சித்தளை
- ஒன்றாத வஞ்சித்தளை ஆகியவையாகும்.

## மொழியை ஆள்வோம்

பக்கம்: 227

**மொழி பெயர்க்க.**

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them,"You let the water and the mud be settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm."

ஒருமுறை புத்தரும், அவருடைய சீடர்களும் மிகுந்த தாகத்துடன் இருந்தனர். ஓர் ஏரியை அடைந்தனர். யாரோ ஒருவர் தன் துணிகளைத் துவைத்திருந்தபடியால், ஏரி நீர் கலங்கி, சேருடன் காணப்பட்டது. புத்தர் தன் சீடர்களை நோக்கி சற்று நேரம் இம்மரத்தடியில் அமைதியாக இளைப்பாறுவோம் என்றார். அரைமணி நேரம் கழித்து அவருடைய சீடர்கள் ஏரியை உற்றுப் பார்த்தனர். அழுக்குகள் ஒதுங்கிவிட்டன. சேறும் நீரின் அடி ஆழத்திற்குச் சென்று படிந்து விட்டது. தண்ணீர் மிகவும் தெளிவாகி விட்டது. உங்கள் மனமும் இதைப்போலத்தான், ஏரியை அழுக்கும், சேறும் கலக்கியது போல உங்கள் மனத்தைக் கலக்கும் செயல்கள் நடைபெற்றால் சற்று நேரம் அமைதியாக இருங்கள். அவை கரைந்து, மறைந்து, அழிந்து போய்விடும். அதுவரை அமைதியாக இருந்துவிட்டு பின் உங்கள் முடிவுகளைச் சிந்தித்து எடுங்கள். அதுவே சிறந்த நேர்மையான வாழ்வுக்கு வழியாகும்.

www.nammakalvi.com



## சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. **மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார் (நேர் கூற்றாக மாற்றுக).**

   "நான் நாளை வீட்டுக்கு வருவேன்" என்று முரளி கூறினார்.

2. **தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவை புகழ்கிறோம் என்று ஆசிரியர் கூறினார் (அயற் கூற்றாக மாற்றுக).**

   தென்னாட்டு பெர்னாட்ஷா என்று அண்ணா புகழப்படுவதாக ஆசிரியர் கூறினார்.

3. **மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சாப்பிட்டான் (பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குக)**

   காலை சிற்றுண்டிக்கு இரண்டு தோசைகளை உணவு விடுதியில் (உணவகத்தில்) உண்டான் (சாப்பிட்டான்).

4. **அலறும் மயிலும், கூவும் ஆந்தையும், அகவும் சேவலும் போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும் (ஒலி மரபுப் பிழைகளை திருத்துக).**

   அகவும் மயிலும், அலறும் ஆந்தையும், கூவும் சேவலும், போன்ற இயற்கையின் ஒலிகளை நாம் நேசிக்க வேண்டும்.

5. **கோழிக் குட்டிகளைப் பிடிக்க பூனைக் குஞ்சுகள் ஓடின (பெயர் மரபுப் பிழைகளைத் திருத்துக).**

   கோழிக்குஞ்சுகளைப் பிடிக்க பூனைக்குட்டிகள் ஓடின.

## அஞ்சல் அட்டையில் எழுதுக.

வார இதழ் ஒன்றில் படித்த கவிதையைப் பாராட்டி அந்த ஆசிரியருக்கு அஞ்சல் அட்டையில் கடிதம் எழுதுக.

ஐயா 6.10.2018 ஆம் நாளன்று தங்கள் தென்றல் இதழில் தன்னம்பிக்கையைப் பற்றிய கவிதை `எட்டிவிடும்` என்னும் தலைப்பில்` இடம்பெற்று இருந்தது. அக்கவிதை படிப்பவர்க்கு ஊக்கத்தையும், புது முயற்சியையும் ஊட்டுவதாக அமைந்திருந்தது. வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தை இளைய சமுதாயத்தின் இதயத்தில் விதைப்பதாய் அமைந்திருந்தது. இதுபோன்ற கவிதைகளுக்கு முன்னுரிமை தருக.

நன்றி!




## நயம் பாராட்டுதல்.

திங்கள்முடி சூடுமலை
தென்றல் விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மை திரு
அருள்சுரந்து பொழிவதெனப்

www.nammakalvi.com



பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே -குமரகுருபரர்

**முன்னுரை:**

தமிழ் இலக்கியங்கள் உள்ளத்து இன்பத்தைப் பெருக்கும் ஆற்றல் படைத்தன அவை இயற்கையைப் போற்றுவதில் காலத்தைக் கடந்து முன் நிற்கின்றன. அந்த வகையில் பொதிய மலையைப் போற்றும் வண்ணம் அமைந்துள்ள குமரகுருபரரின் பாடலில் காணப்படும் இலக்கிய நயங்களை காண்போம்.

**திரண்ட கருத்து:**

நிலவைத் தன் மணிமுடியாகச் சூடிய மலை. எப்போதும் தென்றல் தவழ்ந்து விளையாடும் மலை. அகலாது தன்னகத்தே தங்குகின்ற முகில் கூட்டங்கள் சூழ்ந்த மலை. தமிழ் முனிவன் அகத்தியன் வாழ்ந்த மலை.

அங்கயற்கண்ணியாம் மீனாட்சி கண் திறந்து அருள் சுரந்து பொழிவதைப் போல் பொங்குகின்ற அருவிகள் விழுகின்ற மலை. பொதிய மலையாம் என் மலையே.

**மையக்கருத்து:**

பொதிகை மலையின் இயற்கைப் பேரழகு, தமிழ் வளர்த்த மலை, அருவி சூழ்ந்த மலை மேகங்கள் தவழும் மலை எனப் பொதிகையின் அழகைக் குமரகுருபரர் மையமாக வைத்து இப்பாடலை இயற்றியுள்ளார்.

**மோனை நயம்:**

செய்யுளில் அடியிலோ, சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை நயம் எனப்படும்.

**சான்று:**

**து**ங்கு முகில் – **த**மிழ் முனி
**அ**ங்கயற்கண்ணி – **அ**ருள் சுரந்து

**எதுகை நயம்:**

செய்யுளில் அடியிலோ சீரிலோ இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை ஆகும்.

**சான்று:**

தி**ங்**கள் – த**ங்**கு
அ**ங்**கயற் – பொ**ங்**கருவி

**அணி நயம்:**

பொதிகை மலையில் விழும் அருவி "அங்கயற்கண் அம்மை திரு அருள் சுரந்து பொழிவதென" என்னும் அடியில் உவமையணி அமைந்துள்ளது.

**சந்தநயம்:**

அறுசீர்ச் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் பெற்று செப்பலோசையுடன் இனிமையாக அமைந்துள்ளது.

www.nammakalvi.com



**இயைபுத் தொடை:**

செய்யுளில் அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபுத் தொடை.

**சான்று:**

சூடு **மலை,** யாடு மலை, வாழு **மலை**

**முடிவுரை:**

குமரகுருபரரின் இப்பாடல் இன்பம் தரும் இன்சுவையுடன் அமைந்து பொதிகை மலையின் புகழைப் பறைசாற்றுகிறது. இது போன்ற பாடல்களைப் படித்து இன்புறுவாமாக.

## மொழியோடு விளையாடு

பக்கம்: 229

### 1. பொருத்தமான வாய்பாடுகளை வட்டமிடுக.

| | | |
|---|---|---|
| பகலவன் | – | காசு/ **(கருவிளம்)** /கூவிளங்கனி |
| மலர்ச்சி | – | கூவிளம்/ **(புளிமா)** /கருவிளம் |
| தாவோவியம் | – | **(தேமாங்கனி)** /தேமா/பிறப்பு |
| வெற்றிடம் | – | நாள்/ **(கூவிளம்)** /புளிமா |
| பூங்குட்டி | – | கருவிளங்கனி/மலர்/ **(தேமாங்காய்)** |

### 2. அகராதியில் காண்க.

| | | |
|---|---|---|
| வயம் | – | வலிமை, வெற்றி, வேட்கை, பறவை, வசம், குதிரை, ஆடு, முயல். |
| ஓதம் | – | ஈரம், வெள்ளம், கடல் அலை, ஒலி, பெருமை, வாதநோய். |
| பொலிதல் | – | செழித்தல், பெருகுதல், மிகுதல், நீடுவாழ்தல், நிகழ்தல். |
| துலக்கம் | – | விளக்கம், ஒளி, பளபளப்பு, மெருகு, தெளிவு. |
| நடலை | – | வஞ்சனை, துன்பம், பொய்மை, பாசாங்கு, அசைவு. |

### 3. வினைத்தொகையை பொருத்தி எழுதுக.

(வளர்தமிழ், விளைநிலம், குளிர்காற்று, விரிவானம், உயர்மதில், நீள்வீதி, கரை விளக்கு, மூடுபனி, வளர்பிறை, தளிர் பூ)

- **வளர்பிறை** நிலவுடன் **விரிவானம்** அழகாகக் காட்சியளிக்கிறது.
- **தளிர்பூங்**கொடிகளும், **விளைநில**ங்களும், மனதைக் கொள்ளையடிக்கின்றன.
- **நீள்வீதி**கள் அனைத்தும் **மூடுபனி**யில் மூழ்கிக் கிடக்கின்றன.
- மெல்ல வீசும் **குளிர்காற்றும் வளர்தமிழ்** புகழ்பாடுகிறது.
- தொலைவில் **கலங்கரை** விளக்கின் ஒளி **உயர்மதில்** சுவரை ஒளிரச் செய்கிறது.

www.nammakalvi.com



**பொருத்துக:**

| | | |
|---|---|---|
| நேர்/நேர்/நிரை | – | கருவிளங்காய் |
| நிரை/நிரை/நேர் | – | கூவிளம் |
| நேர்/நிரை | – | தேமாங்காய் |
| நிரை/நிரை | – | தேமாங்கனி |
| நேர்/நேர்/நேர் | – | கருவிளம் |

**விடை**

| | | |
|---|---|---|
| நேர்/நேர்/நிரை | – | தேமாங்கனி |
| நிரை/நிரை/நேர் | – | கருவிளங்காய் |
| நேர்/நிரை | – | கூவிளம் |
| நிரை/நிரை | – | கருவிளம் |
| நேர்/நேர்/நேர் | – | தேமாங்காய் |

**4. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

உலகையே புரட்டிப் போடும்
உன்னத வலிமை
எழுதுகோலுக்கு உண்டு

செங்கோலின் வலிமையால்
உயர்ந்ததை விட
எழுதுகோலின் வலிமையால்

உயர்ந்த நாடுகள் பல உண்டு
எழுத்தையும் போற்றுவோம்...
எழுதுகோலையும் போற்றுவோம்...



## கலைச்சொல் அறிவோம்

**எழுத்துச் சீர்திருத்தம்** – (Reforming the letters)
பெரியாரால் தமிழ்மொழியில் ஏற்படுத்தப்பட்டது.

**எழுத்துரு** – (font)
அச்சில் எழுத்துக்களின் வடிவமைப்பு அளவைக் குறிப்பது.

**மெய்யியல்** – (philosophy)
வாழ்வியல் உண்மைகளைத் தத்துவ இலக்கியமாக, கருத்துகளாக கூறுவது.

**அசை** – (syllable)
சொல்லைப் பிரித்தல் (சீா் பிரித்தல்).

**இயைபுத்தொடை** – (Rhyme)
செய்யுளில் அடிதோறும் இறுதிச் சொல் அல்லது எழுத்து ஒன்றி வருவது.

## நிற்க அதற்குத்தக...

**ஒரு நல்ல தோழியாக/தோழராக நண்பர்களுக்குச் செய்யவேண்டியது.**

அ) எழுதுபொருள்களை நண்பர்களுக்குக் கொடுத்து உதவுவது.
ஆ) விடுப்பு எடுத்த நண்பர்களுக்கு ஏடுகள் கொடுத்து உதவுதல், வகுப்பில் நடந்தவற்றைப் பகிர்தல்.
இ) நல்ல பண்புகளைப் பாராட்டி ஊக்குவித்தல்.
ஈ) குறைகளை நயமுடன், புண்படா வகையில் சுட்டிக்காட்டுதல்.
உ) இடர்வரும் வேளையில் இனிமையான, இதமான சொற்களால் தேற்றுதல்.